**தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**
**தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி, 2021/2022**

தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக் கற்கை நெறியானது, **தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில்** நடாத்தப்படும்.

**1. பொதுவானவை**

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறியானது இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கை நெறிகள் பின்வரும் கற்கைத் துறைகளில் வழங்கப்படுகின்றது.

**அ) கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)**

(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
(ii) கப்பற்துறை கல்வியும் தொழில்நுட்பமும்

**ஆ) ஏனைய கற்கைநெறிகள் (வகை II)**

(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்
(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்
(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்
(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்
(v) தகவல் தொழில்நுட்பம்
(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்
(vii) பல்பகுதிய தொழில்நுட்பம்
(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்

**2. தகைமைகள்**

**2.1 வயது மற்றும் தகைமைகள்:**

**அ)** விண்ணப்பதாரிகள் 31.12.2020 திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**ஆ)** 31.12.2020இல் 20 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பமும், கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாட நெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

**இ)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

**2.2 கல்வித்தகைமைள்**

**அ)** விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ/த) பரீட்சையில், கீழ் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம்
(iv) உயர் கணிதம்

அத்துடன், இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2018 அல்லது 2019 அல்லது 2020ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஆ)** கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)இற்கு விண்ணப்பிற்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலமொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்.

## 3. தெரிவு முறைமை

### 3.1 கற்கைநெறிக்கான அனுமதி:

அனுமதிக்கான தெரிவானது க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க.பொ.த. (உ/த) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது இசற்-மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

### 3.2 கற்கைத்துறை

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

## 4. விண்ணப்பிக்கும் முறை

### 4.1 விண்ணப்பப்படிவம்

(i) முதலில், விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமா்ப்பிக்க வேண்டும்.

**http://www.itum.mrt.ac.lk**

(ii) பின்னர், ஒன்லைன் (online) மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சுயமாக பதிப்பிடக்கூடிய பிரதியை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்யப்படல் வேண்டும் (download the auto generated printable copy of the online application).

(iii) பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவமானது பதிப்பிடப்பட்டு (hard copy), விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் (விண்ணப்பப்படிவத்தின் 3ம் மற்றும் 5ம் கட்டங்களை பார்க்க). அத்துடன், உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (உ/த) சான்றிதழும் இவ் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

(iv) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது (hard copy), கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NDT Admission 2021/2022"** என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, **உதவி பதிவாளா், கல்விசாா் மற்றும் மாணவா் விவகாரப் பிரிவு, தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம், தியகம, ஹோமாகம** என்ற முகவரிக்கு **பதிவுத்தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக சமா்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது (hard copy) விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக உதவி பதிவாளா், தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

(vi) தமது விண்ணப்பப் படிவத்துடன் (hard copy), ஒரு சுய முகவரியிடப்பட்ட ரூ. 45/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"x4") கடித உறையையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் ஆகிய இரண்டையும் விண்ணப்ப முடிவு திகதிற்குள் சமா்ப்பிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்க. ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் இரண்டையும் சமா்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரா்கள் அடுத்த கட்ட பரிசீலனைக்கு கருத்திற் கொள்ளப்படமாட்டாா்கள்.

### 4.2 கற்கைநெறிக்கான முன்னுரிமை

(i) இரண்டு வகையான கற்கைநெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் **கடல்சாா் கற்கைநெறிகள் (வகை I)** அல்லது **ஏனைய கற்கைநெறிகள் (வகை II)** அல்லது **இரண்டு கற்கைநெறிகளுக்கும்** விண்ணப்பிக்கலாம். இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்களது விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை (I)இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. **கடல்சாா் கற்கைநெறிகளுக்கு** விண்ணப்பிக்கும் மாணவா்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) வகை (II)இல் முதலாவது விருப்பு 1, இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1,2,3,4,5,6,7,8) என குறிப்பிடுக.

5.

(i) **விண்ணப்ப கட்டணம்**:

ஏதாவது ஒரு வகை கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 800/= (எண்ணூறு ரூபாய்)உம் இரண்டு வகையான கற்கைநெறிகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 1000/= (ஆயிரம் ரூபாய்)உம் விண்ணப்ப கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக்கிளையில் மட்டும் **தொழில்நுட்பவியல் நிறுவகம்**, **மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளையில்** உள்ள கணக்கு **இல.0000308280**க்கு வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) ஒன்லைன் விண்ணப்பத்துடன் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(iii) **விண்ணப்ப முடிவு திகதி:**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 17ம் திகதி (17.09.2021) ஆகும்.

## 6. தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி பரீட்சை

ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி தேர்ச்சி பரீட்சைக்கு தேவையான உசாத்துணை நூல்களை ITUM இணையத்தள முகவரியில் **(http://www.itum.mrt.ac.lk)** பெற்றுக் கொள்ளலாம்.

## 7. பதிவு செய்தல்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கை நெறிக்குப் பதிவு செய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் **மூலப்பிரதிகளை** சமர்ப்பித்தல் வேண்டும்.

- க.பொ.த. (உ/த) சான்றிதழ்
- க.பொ.த. (உ/த) இசற்-மதிப்பீடு (Z-Score) சான்றிதழ்
- பாடசாலை விலகற் சான்றிதழ்
- பிறப்புச் சான்றிதழ்
- சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களில் பெயர்மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான அத்தாட்சி பத்திரம்

## 8. முக்கிய குறிப்புகள்

**(i)** **தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறியிற்கு பதிவு செய்த பரீட்சார்த்தி ஒருவர், அக் கற்கை நெறிக் காலப்பகுதியில், இவ் நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ எதாவதொரு கற்கை நெறியை பயில்வதற்கும் அனுமதி பெறுவதற்கும் தகுதியற்றவராவர்.**

**(ii)** **ஏற்கனவே இவ் நிறுவகத்திலோ அல்லது வேறு எதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.**

**(iii)** **விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும் சரியானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என அறியப்பட்டால் விண்ணப்பதாரி நிறுவகம் எடுக்கும் எந்தவொரு பொருத்தமான தீர்மானத்திற்கும் உடன்பட வேண்டும்.**

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்